தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1969 செப்டம்பர் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 11 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாடு அரசின் சிறப்பு அதிகாரி

* 186 வின.—**திரு. சு. துரைசாமி :**

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளும் வேலைகளைத் துரிதப்படுத்த I.A.S. தகுதியில் தனி அதிகாரி ஒருவரை நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம். புது டில்லியில் உள்ள இப்பதவிக்குச் சிறப்பு பிரதிநிதி (Special Representative) எனப் பெயரிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இப் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட திரு. எம். ஜி. ராஜாராம், ஐ.எ.எஸ்., 1969 அக்டோபரில் புது டில்லியில் பொறுப் பேற்கலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசாங்கம் உதவித் தொகைகள் பெறுவதற்குத் தவறிப்போய்விட்டது. வறட்சி நிவாரணப் பணிகளுக்காகக் கடந்த பல ஆண்டுகளாகவே மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகை பெற்றிருக்கின்றன. ஆனால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரை இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம் இந்த மாதிரி அதிகாரியைப் போடாத காரணத்தினால்தான் இப்போது இந்த அரசாங்கம் அப்படிப்பட்ட அதிகாரியைப் போட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

THIRU K. VINAYAKAM : May I know from the Hon. Minister, what are the functions which this Liaison Officer is expected to discharge and whether it would not be in the interest of our Government if the Ministers by themselves could represent to the Central Government without the intervention of this officer?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது 12 மாநிலங்களுக்காக அப்படிப்பட்ட சிறப்புப் பிரதிநிதிகள் டில்லியில் இருந்துகொண்டு மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் இடையே நல்ல முறையில் தொடர்புப் பணியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அமைச்சர்களேகூட பல நேரங்களில் தங்களுடைய மாநிலத்தைப்பற்றிய முறையீடுகளைத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருந்தாலும் மத்திய அரசாங்கத்திலுள்ள அதிகாரிகளை அணுகிட வேண்டும். மத்திய அமைச்சர்களை அணுகிட உதவும் வாய்ப்பாக இருந்தால் நல்ல பயன்தரும் என்ற அளவிலேதான் புதிதாக இந்த அதிகாரியை இந்த அரசு நியமித்திருக்கிறது.

DR. H. V. HANDE : While I cannot subscribe to the views of my colleague Thiru K. Vinayakam. . . .

THIRU K. VINAYAKAM : I object to this kind of insinuation.

DR. H. V. HANDE : I wish to know from the Government whether it is not a fact that a number of cases go by default since we have not made proper representations before the Central Government. In view of the fact that we have inter State problems like the 'Cauveri problem', will the Government extend the scope of the work of this officer to look after not only Centre-State relationship but also inter-State problems like sharing of the waters of river Cauveri, so that they are properly solved at the Centre?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய அரசாங்கத்திடமிருந்து ஆகவேண்டிய எல்லா வேலைகளையும் இந்தப் பதவியில் இருக்கின்ற அதிகாரிகள் மூலம் கவனிக்கலாம் என்பதற்காகத்தான் இந்தப் பதவி உருவாக்கப்பட்டிருக்கிறது.

I.A.S. Officers in Technical Departments

* 187 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state the number of officers of the Indian Administrative Service now posted as Heads of Technical departments in the State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொழில் நுட்பத் துறை என்று எந்தத் துறையும் அறிவிக்கப்படவில்லை. ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் தலைமையின்கீழ் இயங்கும் துறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. பத்திரப் பதிவுத் துறைத் தலைவர், சென்னை-1.
3. பால் உற்பத்தி-கால் நடை வளர்ப்புத் துறை ஆணையாளர்.
3. பால் உற்பத்தி-கால் நடை வளர்ப்புத் துறை ஆணையாளர்.
4. தொழில்-வணிகத் துறை இயக்குனர்.
5. வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குனர்.
6. தொழிலாளர் துறை ஆணையாளர்.